**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 9.5.2012**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் சார்ந்த தொழில்களில் முக்கியத் தொழிலாக திகழும் சர்க்கரைத் தொழில் கிராமப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரிய அளவில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

இப்படிப்பட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சர்க்கரை உற்பத்தியில், தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் ஈடுபட்டு வருகின்றன. இந்த சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நலமும், வளமும் பெற வேண்டும் என்பதே எனது அரசின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின், அதாவது South Indian Sugar Mills Association – SISMA ஒப்பந்தத்தின் படி ஊதியம் பெற்று வருகின்றனர். இதற்கு முன் இருந்த ஒப்பந்தக் காலம் 31.3.2008 உடன் முடிவடைந்தது.

1999-ஆம் ஆண்டு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்களை தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்தன. இந்த மனுக்களின் மீது சென்னை உயர் நீதிமன்றம் 4.8.2009 அன்று உத்தரவு பிறப்பித்தது. அந்த ஆணையில், தொழிற் சங்கங்களின் பிரதிநிதித்துவத்தை கண்டறியவும், அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வருங்காலங்களில் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பாக ஊதிய உயர்வு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள ஏதுவாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தினக்கூலி பணியாளர்களுக்கும், தேர்தலில் பங்கெடுக்கும் உரிமை உண்டு என அரசு விளக்கம் அளித்தது.

இதனை எதிர்த்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் செயல்பட்டு வரும் இரண்டு தொழிற்சங்கங்கள் நீதிபேராணை மனுக்களை சென்னை உயர்நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையிலும் தாக்கல் செய்து, தொழிற் சங்கத் தேர்தல் நடத்தப்படுவதற்கு இடைக்காலத் தடை பெற்றன. மேற்படி இரண்டு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட இடைக்கால தடையை விலக்கக் கோரி சர்க்கரைத் துறை ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

இவ்வழக்குகளில் உள்ள இடைக்காலத் தடை விலக்கப்பட்ட பின்னர் தான் சர்க்கரை ஆலைகளில் தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்பட்டு, ஆலைப் பணியாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த இயலும்.

எனவே, முந்தைய அரசு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு குந்தகம் இல்லாத வகையில் தொழிலாளர்களுக்கு ad hoc ஊதியம் வழங்க 2010 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. அதன்படி, 2008 ஆம் ஆண்டு, சிஸ்மா ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் 90 விழுக்காடு ad hoc ஆக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு 4.4.2012 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து

சர்க்கரை ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை இணை ஆணையர் ஆகியோர் முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதி நிலை நலிவுற்று இருப்பினும், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு எவ்வித குந்தகமுமின்றி, 1.4.2008 முதல் சிஸ்மா ஒப்பந்தப்படி இறுதி செய்யப்பட்ட சம்பள விகிதத்தில் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 10 விழுக்காடு தொகை உடனடியாக வழங்கப்படும்.

மேலும், சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட உள்ள 10 விழுக்காடு ஊதியத்தையும் கணக்கில் கொண்டு, அந்த அடிப்படை ஊதியத்தில் Basic Pay-ல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் என 1.4.2012 முதல் வழங்கப்படும். அதாவது, இனி வருங்காலங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிஸ்மா ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதத்தின் அடிப்படை ஊதியத்தில் 25 விழுக்காட்டை சிறப்பு ஊதியமாக பெறுவார்கள்.

இந்தச் சலுகைகள் மூலம் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 1,595 ரூபாய் முதல் 1,907 ரூபாய் வரை கூடுதல் ஊதியம் கிடைக்கும். 2008–ஆம் ஆண்டு முதல் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படுவதால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 2 கோடியே 80 லட்சம் ரூபாயும், 1.4.2012 முதல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு 12 கோடியே 46 லட்சம் ரூபாயும் கூடுதல் செலவு ஏற்படும்.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் முறையான ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்ய இயலாது என்பதால், தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து தொழிலாளர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் பயன்பெறும் பொருட்டு எனது அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. நீதிமன்ற வழக்குகள் நிறைவு பெற்ற பின் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த ஊதிய உயர்வினை ஏற்று, தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடன் பணிக்குத் திரும்புவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்து அமைகிறேன்.

*******